மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.03/2023
அ.வ.எண்.28/2022

மாதையன் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

1. அலமேலு
2. வெங்கடாசலம்
3. வேலு
4. முனுசாமி
5. பெருமா ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 10.07.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்தியபிரியா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மணிகண்ட ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) வாதிகள்/எதிர்மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதி/மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சொத்துகளும், மற்ற சொத்துகளும் கோவிந்தகவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாகும். மேற்படி கோவிந்தகவுண்டருக்கு தாசப்பன், பெருமாள் மற்றும் ராமண்ணகவுண்டர் ஆகியோர் வாரிசுகள் ஆவர். கோவிந்த கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் ச.எண்.149/9ல் பு.ஏ.10 செண்ட், ச.எண்.149/12ல் பு.ஏ.0.08

செண்ட், ச.எண்.149/14 ல் பு.ஏ.0.16 செண்ட், ச.எண்.149/17 ல் பு.ஏ.0.18 செண்ட், ச.எண்.149/19 ல் பு.ஏ.0.13 செண்ட், ச.எண்.157/2 ல் பு.ஏ.0.54 செண்ட், ச.எண்.157/4 ல் பு.ஏ.0.38 செண்ட், ச.எண்.158/3 ல் பு.ஏ.0.08 செண்ட், க.ரீ.ச.எண்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட், சஎண்.158/14 ல் பு.ஏ.0.37 செண்ட், ச.எண்.158/15 ல் பு.ஏ.0.06 செண்ட் மற்றும் ச.எண்.158/10 ல் 30 செண்ட் நிலம் அனைத்தும் பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி கோவிந்தகவுண்டரின் வாரிசுகள் அனைவருக்கும். மேற்படி சொத்தில் 3 ல் ஒரு பாகம் உள்ளது.

(ii) மேற்படி சொத்துகள் அனைத்தும் இதுவரை அளந்து அத்துகாட்டி பாகம் முறைப்படி யாருக்கும் பிரிக்கப்படவில்லை. கோவிந்தகவுண்டரின் மகன் ராமண்ணகவுண்டரின் வாரிசு மனுதாரர் ஆவார். மேற்படி ராமண்ணகவுண்டர் தனக்கு பிதுராஜ்யமாக பாத்தியப்பட்ட ச.எண்.159/2A ல் 0.65 செண்ட் மற்றும் ச.எண்.157/2 ல் 0.12 செண்ட் நிலத்தை தனது சகோதரர் தாசப்ப கவுண்டரின் மனைவி சின்னதாயம்மாளுக்கு கடந்த 04.08.1969 ம் தேதியன்று ஆவண எண்.1593/1969 ன் படி கிரயம் செய்து கொடுத்தார். மேற்படி நிலத்தை விற்கும்போது மனுதாரரின் தந்தை அளந்து காட்டி விற்கவில்லை. ச.எண்கள்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் மற்றும் 157/2 ல் பு.ஏ.0.54 செண்ட் நிலத்தை விட அதிக நிலம் அமைந்துள்ளதை அளந்து பார்க்க மனுதாரர் எதிர்மனுதாரர்களிடம் பலமுறை கேட்டும் அதற்கு சம்மதிக்கவில்லை.

(iii) மேற்படி ச.எண்.159/2A ல் உள்ள 0.65 செண்ட் நிலத்தை மனுதாரரின் தந்தை விற்ற நிலம் போக 0.31 செண்ட நிலத்தை மனுதாரரின் தந்தை ஓட்டி வந்து, அவரது இறப்பிற்கு பிறகு மனுதாரரின் பெயரில் பட்டா எண்.146 வழங்கப்பட்டது. மனுதாரரின் தந்தை ச.எண்.159/2A ல் உள்ள 0.65 செண்ட் நிலத்தை விற்ற பிறகும் அதில் 0.31 செண்ட் நிலத்தை இன்றுவரை தொடர்ந்து அவரது தந்தை காலத்திலிருந்தே ஓட்டி அனுபவித்து வருகிறார். ச.எண்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் நிலத்திற்கு அதிகமான நிலம் எவ்வளவு வந்தாலும் 3 ல் ஒரு பாகம் மனுதாரருக்கு சேர வேண்டியது. எனவே நீதிமன்ற ஆணையரை நியமித்து மனுசொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் அளந்து அத்துகாட்டி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

3) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞரின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையரை நியமித்து மனுசொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் அளந்து அத்துகாட்டி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதிகள்/எதிர்மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதி/மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர் தரப்பில் தாவா சொத்து உட்பட இதர சொத்துகள் தனது பாட்டனார் கோவிந்த கவுண்டருக்கு பாத்தியப்பட்டு, இதுநாள்வரையில் தங்கள் குடும்பத்திற்குள் பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றும், இந்நிலையில் மனுதாரரின் தந்தை ராமண்ணகவுண்டர் தனக்கு பிதுராஜ்யமாக பாத்தியப்பட்ட ச.எண்.159/2A ல் 0.65 செண்ட் மற்றும் ச.எண்.157/2 ல் 0.12 செண்ட் நிலத்தை தனது சகோதரர் தாசப்ப கவுண்டரின் மனைவி சின்னதாயம்மாளுக்கு கடந்த 04.08.1969 ம் தேதியன்று ஆவண எண்.1593/1969 ன் படி கிரயம் செய்து கொடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) மேற்படி நிலத்தை விற்கும்போது மனுதாரரின் தந்தை அளந்து காட்டி விற்கவில்லை என்றும், ச.எண்கள்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் மற்றும் 157/2 ல் பு.ஏ.0.54 செண்ட் நிலத்தை விட அதிக நிலம் அமைந்துள்ளதை அளந்து பார்க்க மனுதாரர் எதிர்மனுதாரர்களிடம் பலமுறை கேட்டும் அதற்கு சம்மதிக்கவில்லை என்றும், மனுதாரரின் தந்தை ச.எண்.159/2A ல் உள்ள 0.65 செண்ட் நிலத்தை விற்ற பிறகும் அதில் 0.31 செண்ட் நிலத்தை இன்றுவரை தொடர்ந்து அவரது தந்தை காலத்திலிருந்தே ஓட்டி அனுபவித்து வருகிறார் என்றும், ச.எண்.159/2A ல் பு.ஏ.1.96 செண்ட் நிலத்திற்கு அதிகமான நிலம் எவ்வளவு வந்தாலும் 3 ல் ஒரு பாகம் மனுதாரருக்கு சேர வேண்டியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) மேற்படி சங்கதிகளை கருத்தில் கொள்கையில் தற்போது இவ்வழக்கில் எதிர்மனுதாரர்கள் தங்களது பாட்டி சின்னத்தாயம்மாளுக்கு பாத்தியப்பட்ட கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின்படி தான் தற்போது தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளனரா? அல்லது கூடுதலாக அனுபவித்து வருகின்றனரா? என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியது இவ்வழக்கை பொருத்து அவசியமாகிறது. அவ்வாறு உள்ள நிலையில், தரப்பினர்களிடையே உள்ள உண்மையான பிரச்சனை சொத்தின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டாலே தீர்வாவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) எனவே மேற்படி சங்கதியை நிரூபிப்பதற்கு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கினை தீர்மானிக்க உதவும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக செல்வி.S.B.ஓவியா வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிட்டு அதனை தல ஆய்வு செய்து, மனு சொத்தின் இயற்கை அமைப்புகள் குறித்து ஆய்வு செய்து, தாவா சொத்தை நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை கொண்டு இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஆகியவற்றின்

அடிப்படையில் அளந்து, அதன் எல்லைகளை நிர்ணயித்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.7000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு தாவா சொத்தை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் நீதிமன்ற ஆணையாளர் விரைவாக தன் அறிக்கை மற்றும் வரைபடங்களை தாக்கல் செய்ய உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.13.09.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.21 11:53:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.21 11:53:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.